செ.வெ.எண்: 240 நாள்: 12.04.2018

# திருநெல்வேலி மாவட்டத்தில் கிராம சுயாட்சி இயக்கம் (Gram Swaraj Abhiyaan) செயல்படுத்தல் தொடர்பாக அலுவலர்களுக்கான ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் திருநெல்வேலி மாவட்டத்தில் கிராம சுயாட்சி இயக்கம் (Gram Swaraj Abhiyaan) செயல்படுத்தல் தொடர்பாக அலுவலர்களுக்கான ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் இன்று (12.04.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 14.04.2018 முதல் 05.05.2018 வரை கிராம சுயாட்சி இயக்கம் (Gram Swaraj Abhiyaan) நிகழ்வுகள் கொண்டாட அரசு உத்தரவிட்டுள்ளது. ஊரக வளாச்சி மற்றும் ஊராட்சித்துறை,ஆதிதிராவிடர் நலத்துறை,பொது சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை,சமூகநலம் மற்றும் சத்துணவுத்திட்டதுறை,வேளாண்மைத்துறை,உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம்,மகளிர் திட்டம் மற்றும் வங்கியாளர்கள் ஒருங்கினைந்து இப்பணிகளை மேற்க்கொள்ளவேண்டும்.

சமூக நீதி தினம் 14.04.2018 அன்று மாவட்ட அளவில் கொண்டாடப்பட வேண்டும் இதில் அரசு நலத்திட்டங்கள் வழங்கபடவேண்டும். 18.04.2018 அன்று தூய்மை பாரத தினம் கொண்டாட வேண்டும். அன்று நமது மாவட்டத்தில் உள்ள குடிநீர் தொட்டிகள்,பொது கழிப்பறைகளைச் சுத்தப்படுத்தவேண்டும் ,தெருக்கள்,சாலைகள் தூப்புரவுப் பணிகள் மேற்கொள்ளவேண்டும்.தனிநபர் இல்ல கழிப்பறைகளை 100 சதவீதம் பயன்பாட்டிற்க்கு கொண்டு வர கண்காணிப்பு குழு மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் 20.04.2018 உஜ்வாலா தினம் அன்று அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் மூலம் சிறப்பு முகாம் நடத்தி எரிவாயு இணைப்பு இல்லாத குடும்பங்களை கணக்கு எடுத்து இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.24.04.2018 தேசிய பஞ்சாயத்து ராஜ் தினத்தன்று கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம்,சுகாதாரம்,மத்திய அரசு திட்டங்கள் செயல் படுத்தல் தொடர்பாக கிராம சபை கூட்டம் நடத்தபட வேண்டும். 28.04.2018 கிராம சத்தி இயக்க தினத்தன்று மாவட்ட அளவில் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம், சௌபாக்கிய திட்டத்தின் மூலம் பயன்பெற்றுள்ள பயனாளிகள் பங்கேற்கும் வகையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும். 30.04.2018 ஆயுஷ்மான் பாரத் அபியான் அன்று சுகதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் மூலம் சுகாதார விழிப்புணர்வு மற்றும் மருத்துவ காப்பீட்டு ஆயுஸ்மான் பாரத் திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். 02.05.2018 விவசாயிகள் நல தினம் அன்று வட்டார அளவில் வேளாண்மைத்துறையின் மூலம் நுன்னீர்பாசனம், தோட்டக்கலைத்திட்டம், கூட்டுப்பண்ணை மற்றும் வேளாண் இயந்திரங்கள் பயன்படுத்தல்,பயிர் காப்பிட்டு திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வுகளை எற்படுத்திட வேண்டும்.05.05.2018 ஆஜீவிகா தினம் அன்று மகளிர் திட்டத்தின் மூலம் வட்டாரம் மற்றும்

மாவட்ட அளவில் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்க வேண்டும். இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் மாவட்ட அளவில் செய்திட வேண்டும்.

கிராம சுயாட்சி இயக்க தன்னிறைவு அடையும் சிறப்பு முயற்சியாக தேசிய அளவில் 21058 கிராம ஊராட்சிகள்,நமது மாநில் அளவில் 1477 கிராமங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் 29 கிராமங்களில் மேற்கண்ட நிகழ்வின் போது முழுமையாக எரிவாயு இணைப்பு வழங்குதல்,100 சதவீத மின் இணைப்பு வசதி செய்தல் அனைத்து வீட்டுகளுக்கும் எல்.இ.டிவிளக்குகள் வழங்குதல்,பிரதம மந்திரியின் ஜன் தன் யோஜனா,ஜீவன் ஜோதி பிமயோஜனா,சுரக்ஷா பிம யோஜ்னா ஆகிய திட்டங்களில் வங்கி மற்றும் மகளிர் திட்ட மூலம் பயனாளிகளை தேர்வு செய்து நலத்திட்டங்கள் வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். மிஷன்இந்திராதனுஷ் திட்டத்தின் மூலம் 29 ஊராட்சி பகுதிகளிலும் 2 வயதுக் குட்பட்ட குழந்தைகள்,கர்ப்பிணி பெண்களில் தடுப்பூசி போடாத நபர்களை கண்டறிந்து சுகதாரத்துறையினர் அங்கன்வாடி பணியாளர்களுடன் இணைந்து விடுபட்ட தடுப்பூசிகளை போட வேண்டும்.திருநெல்வேலி மாவட்டத்தில் கிராம சுயாட்சி இயக்க கொண்டாட்ட நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கினைந்து செயல்படவேண்டும். என பேசினார்.

இக்கூட்டத்தில் ஊரக வளர்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, உதவி இயக்குனர் ஊராட்சிகள் திரு.கல்யாணசுந்தரம்,மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திரு.விஜயகுமார்,மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.இந்திரா,வேளான்மை இணை இயக்குனர் திரு.பெருமாள்,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி,முன்னோடி வங்கி மேலாளர் திரு.கஜேந்திர நாதன்,ஊரக வளாச்சி முகமை கூடுதல் கண்காணிப்பாளர் திரு.சங்கர் மற்றும் அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி